[26th March 1965

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தேனீக்களிடம் ஜாக்கிரதையாக பழக வேண்டும். அதற்காக ட்ரெயினிங் கொடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் விரும்பினால், அதைச் செய்யச் சொல்லலாம்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—REQUEST FOR A HALF-HOUR DEBATE.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பத்திரிகைகள் பேரில் எல்லாம் நடவடிக்கை எடுத்திருப்பது பற்றி, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலை ஒட்டி ஒரு அரைமணி நேர விவாதம் செய்ய, ரூல் 40-ன் கீழே இன்றைக்கு அல்லது மறுநாள், அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பத்திரிகைகள் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கருணாநிதி கூட . . . .

கனம் சபாநாயகர்: அதெல்லாம் பற்றிப் பேசவேண்டாம். விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இன்றைக்காவது, இப்பொழுதே கேள்வி நேரம் இன்னும் அரை மணி நேரம் பாக்கி இருக்கிறது, அல்லது நாளைக்காவது கனம் சபாநாயகர் அவர்களே பார்த்து இதன் மீது ஒரு அரை மணி நேர விவாதம் செய்ய அனுமதி கொடுக்க வேண்டும். இதிலே பல பிரச்சினைகள் இருப்பதால், அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே தெளிவாகாத காரணத்தினால், பத்திரிகைகளின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் கனம் சபாநாயகர் அருள்கூர்ந்து இதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, தகவல் இல்லை என்று கொடுக்காமல் இல்லை. இந்த விஷயம் ஸப்-ஜுடிஸ் ஆக இருக்கிறது, விசாரணையில் இருக்கிறது; ஆகவே அதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்று சொன்னேன். அரைமணி நேர விவாதம் எடுத்துக் கொண்டாலும், கோர்ட்டிலே இருக்கிற விஷயம் பற்றி என்ன கூறமுடியும் என்றுதான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: As the Hon. the Leader of the House has stated that the matter is *sub judice*, I do not think any useful purpose will be served by a half-hour debate on the matter. If I allow a half-hour debate, discussion may take place on the details of the case which is said to be *sub judice*. Hence, I do not consider it necessary to allow a half-hour debate on this matter.